★ இங்கிலீஷ் வகைகள்
★ பாஸ்தா சாப்பாடு
★ மின் புருட் ஜூஸ்கள்
செந்தாமரை
(றிக்கோ)
குளிர் தடாகம்
870, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மதிய உணவாக
கோழி பிரியாணி
குசிமிக்க நூடில்ஸ் வகைகள்
றிக்கோ
கோப்பியை அரைத்துப்
பெற்றுக்கொள்ள
செந்தாமரை
(றிக்கோ)
870, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 15 சனிக்கிழமை (01 10 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 308

# புலிகள் நடத்திய தாக்குதலில் படையினர் நால்வர் பலி!

## ஊர்காவற்றுறையில் அதிரடி!

கொழும்பு ஒக்டோபர் 1

விடுதலைப் புலிகள் நடத்திய மற்றொரு அதிரடித் தாக்குதலில் நான்கு படையினர் பலியாகினர். ஆறு பேர் காயமடைந்தனர்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஊர்காவற்றுறைப்பகுதிக்குள் ஊடுருவி புலிகள் இத்தாக்குதலை நடத்தினர்.

நேற்று வெள்ளிக்கிழமை இந்த அதிரடித் தாக்குதல் இடம் பெற்றது.

இத்தகவல்களை, கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விவரங்கள் எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை வெளிவரவில்லை.

# பிரிட்டனிலும் 8 பேருக்கு கொள்ளை நோய்!

## டில்லியில் இருவர் மரணம்

லண்டன், ஒக். 1

கொள்ளை நோய் தற்போது பிரிட்டனிலும் பரவ ஆரம்பித்துள்ளது.

அங்கு எட்டுப்பேருக்கு கொள்ளை நோய் கண்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இந்தியாவில் இருந்து சென்றவர்களினாலேயே பிரிட்டனில் கொள்ளைநோய் பரவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளைநோய் ஐரோப்பிய நாடுகளில் பரவும் ஆபத்து ஏற்பட்டதை அடுத்து, ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் பிரான்ஸில் அவசர மாநாடு ஒன்றைக் கூட்டுகிறார்கள்.

இதற்கிடையில் இந்தியாவில் பரவும் கொள்ளைநோயை உலக நாடுகள் மிகைப்படுத்துவதை இந்திய நிதி அமைச்சர் மன்மோகன்சிங் கண்டித்துள்ளார்.

பெரும்பாலான வெளிநாடுகள் இந்தியாவுடனான விமானச்சேவையை ரத்துச் செய்திருப்பது இந்தியாவுக்குச் சிக்கலை ஏற்படுத்தி இருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

இந்தியா முழுவதும் இதுவரை 1200 பேருக்கு இந்த நோய் கண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் நோயின் மையப்பகுதி எனக் கருதப்படும் குஜராத்தின் சூரத் நகரம் மட்டுமே நோய்ப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

சூரத்திலிருந்து சுமார் ஆயிரம் கிலோமீற்றர் தூரத்தில் உள்ள புதுடில்லியிலும் இருவர் இந்த நோயினால் மரணம் அடைந்துள்ளனர்.

இவர்களுக்கு செப்டிசிமிக் கொள்ளை நோய் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (இ)

முச்சந்தி முரளி



அப்ப தாண்டிக்குளம் தொடர் கதை என்டு நினைக்கிறன் போல......!

## கடற்படையினரின் சடலங்கள் கரையொதுங்கின

கொழும்பு, ஒக். 1

''சாகரவர்த்தனா'' கடற்படைக் கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த கடற் (4ஆம் பக்கம் பார்க்க)

## முகமூடி அணிந்து நடமாடும் புதுடில்லி நகர வாசிகள்

புதுடில்லி, ஒக். 1

இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் கொள்ளை நோயால் 18 வயது இளைஞர் ஒருவரும் 5 வயதுச் சிறுவன் ஒருவரும் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து அங்கு மாபெரும் பீதி நிலவுகிறது.

பொதுமக்கள் சிலர் பாதுகாப்புக்காக முகமூடி அணிந்து புதுடில்லி வீதிகளில் நடமாடுவதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

முகமூடி அணிவதால் சுவாசம், எச்சில் ஆகியவற்றால் பரவும் நிமோனிக் கொள்ளை நோயில் இருந்து தப்பி விடலாம் என்று மக்கள் கருதுகிறார்கள்.

தற்பாதுகாப்பு நடவடிக்கையாக புதுடில்லியில் பாடசாலைகள், சினிமாத் தியேட்டர்கள் மூடப்பட்டுள்ளன. (இ)

## அதிகாரிகள் மறுப்பு

கொழும்பு, ஒக். 1

பம்பாயில் இருந்து கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த ரஷ்யக்கப்பல் ஒன்றில் கொள்ளை நோய் நோயாளி ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டதாக வெளிவந்த செய்தியை அதிகாரிகள் மறுத்துள்ளனர். (இ)

# படைகளுக்கு ஆட்சேர்ப்பும் பயிற்சி அளிப்பதும் தொடரும்

## சிரேஷ்ட ராணுவ அதிகாரி தகவல்

கொழும்பு, ஒக். 1

சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டாலும், யுத்தப்பயிற்சியும் இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பதும் தொடர்ந்து நடைபெறும்.

சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

அரசு நீட்டியுள்ள நேசக்கரங்களை விடுதலைப்புலிகள் அரவணைக்காவிடின் யுத்தத்துக்குத் தயாராக படையினர் இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை — இருதரப்பினருக்கும் இடையே தொடர்ந்து இடம்பெற்றுவரும் மோதல்களில் உயிரிழப்புகள் ஏற்படும் நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்த எதிர்பார்ப்புகள் பாதிக்கப்படக்கூடும் என்று அரசியல் அவதானிகள் கருதுவதாக ஏ.எப்.பி. செய்திஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (ஐ-எ-6)

# சுதந்திரக்கட்சியில் இனி அனுராவுக்கு இடம் இல்லை

## தர்மசிறி சேனநாயக்கா அறிவிப்பு

கொழும்பு, ஒக். 1

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் அனுரா பண்டாரநாயக்காவை சேர்த்துக்கொள்ளும் முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா இத்தகவலை வெளியிட்டார்.

அனுரா பண்டாரநாயக்காவும் சுதந்திரக்கட்சியில் மீண்டும் சேர்ந்து கொள்வதற்காக தம்மை அணுகவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அனுராவுக்கு சுதந்திரக்கட்சி உறுப்புரிமை வழங்கப்பட்ட பின்னர், அவருக்கு ராஜாங்கப் பதவி ஒன்று வழங்கப்படலாம் என்று வெளியான பத்திரிகைச் செய்தியை அடுத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்விவரங்கள் வெளியிடப்பட்டன. (இ-எ)

# தாண்டிக்குளத்தில் தரிப்பிட வசதிகள்

கொழும்பு, ஒக். 1

தாண்டிக்குளத்தில் உள்ள பிரதான தடை முகாமில் பயணிகளுக்குரிய வசதிகள் போதாமையினால் அப்பகுதியில் மேலதிக தரிப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்பட இருப்பதாக வவுனியா அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சிடமிருந்து இதற்கென நிதி பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் பயணிகள் தாமதமின்றி வடக்கே செல்ல வாய்ப்பு ஏற்படும். நோயாளிகள், பெண்கள், வயோதிபர்கள் என்ற அடிப்படையில் பயணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை —

தற்சமயம் வவுனியா பிறவுண் கம்பனியில் இயங்கும் பொலிஸாரின் ''பாஸ்'' வழங்கும் அலுவலகத்தை தாண்டிக்குளத்திற்கு மாற்ற திட்டமிட்டிருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

# கொக்கோத் தோட்டத்தில் மற்றொரு மனித புதைகுழி!

## தோண்டுவதற்கு நீதிவான் அனுமதி

கொழும்பு, ஒக். 1

மாத்தளையில் கொக்கோத் தோட்டம் ஒன்றில் இருப்பதாகக் கூறப்படும் மனிதப் புதைகுழி ஒன்றை தோண்டுவதற்கு கண்டி மேலதிக நீதிவான் டி. எம். சிறிவர்த்தனா அனுமதி வழங்கியுள்ளார்.

தென்பகுதி வன்செயல்களின் போது கொல்லப்பட்ட 36 பேரின் சடலங்கள் அந்த இடத்தில் இரகசியமாகப் புதைக்கப்பட்டுள்ளதாக பத்திரிகையாளரான டி. பி. எல் கடுவ என்பவர் சமர்ப்பித்த சத்தியக் கடதாசியை பரிசீலனை செய்த பின்னர், நீதிவான் இந்த அனுமதியை வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ-6)

# துறைமுகத்துக்கு வெளியே 11 கப்பல்கள் தடுத்துவைப்பு

கொழும்பு, ஒக். 1

இந்தியாவில் இருந்து புறப்பட்டு கொழும்புத் துறைமுகம் வந்துள்ள கப்பல்களை அவை புறப்பட்டு ஏழு நாட்களின் பின்னரே அவற்றை துறைமுகத்திற்குள் அனுமதிக்கப்போவதாக இலங்கைத் துறைமுக அதிகார சபை அறிவித்துள்ளது.

ஏற்கனவே இந்தியாவில் இருந்து வந்த இத்தகைய 11 கப்பல்கள் வெளித்துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளன.

இத்தகைய மேலும் 13 கப்பல்களில் இருந்தும் சரக்குகளை கையாளும் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் கொள்ளை நோய் பரவி வருவதை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-எ)

# கொள்ளை நோய் அபாயம்: யாழ் மக்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 1

இந்தியாவில் பரவிவரும் கொள்ளை நோய் (பிளேக்) குறித்து விழிப்புடன் இருக்குமாறு யாழ். குடாநாட்டு மக்களிடம் சுகாதார பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கையில் கடந்த பல ஆண்டுகளாகக் காணப்படாத இந்நோய் தற்சமயம் இந்தியாவிலிருந்து இங்கு பரவக்கூடிய ஆபத்து உண்டு என்றும் —

ஆயினும் இந்த ஆபத்து குறித்து மக்கள் வீண் பீதி கொள்ளத் தேவையில்லை என்றும் யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சுகாதாரப்பகுதி ஊழியர்களுக்கு இந்நோய் பற்றியும், அதனைக் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் போதிய பயிற்சி அளிக்கப்பட்டிருப்பதாகவும் —

சுகாதாரப் பகுதியினருக்கு மக்கள் முழு ஒத்துழைப்புக் கொடுத்தால் இந்நோய் எமது பகுதிகளுக்குப் பரவு (4ஆம் பக்கம் பார்க்க)

# 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட சட்டவிரோத ஆயுதங்கள்!

## கண்டுபிடித்து கைப்பற்ற விசேட பொலிஸ் அணி

கடந்தகால வன்செயல்களின்போது சில உயர்நிலை அரசியல்வாதிகளினால் அவர்களின் ஆதரவாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டதாகக் கூறப்படும் சட்டவிரோதமான 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆயுதங்களை கைப்பற்றுவதற்காக விசேட பொலிஸ் அணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் பிராங்க் டி சில்வாவின் உத்தரவின் பேரில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மித்ர ஆரியசிங்காவின் மேற்பார்வையில் இவ்விசேட பொலிஸ் அணி செயல்படுவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஐ கனகரத்தினத்தின் வழிநடத்தலில் இயங்கும் இந்த அணியில் சுமார் 25 பொலிஸ் அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றனர். (ஐ-எ-6)

# தொண்டர் நிறுவன பிரதிநிதிகள் 19 பேர் யாழ். வருகிறார்கள்

யாழ்ப்பாணம், ஒக். 1

வெளிநாட்டு மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் 19 பேர் இன்று யாழ். வரவுள்ளனர்.

திருமலையில் இருந்து ''பிளாம்பயான்'' கப்பலில் நேற்று மாலை வடக்கே புறப்பட்டிருந்த இவர்கள் இன்று காலை பருத்தித்துறையை வந்தடைவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாப்பாணத்தில் இயங்கும் தமது நிறுவனங்களின் செயற்பாடு குறித்து இங்குள்ள அலுவலக அதிகாரிகளுடன் கலந்துரையாடவும், தாம் இங்கு மேற்கொண்டுள்ள திட்டங்களைப் பார்வையிடுவதற்காகவுமே இவர்கள் இங்கு விஜயம் மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் தமது புனர்வாழ்வுத் திட்டங்களை செயற்படுத்த மேலும் சில சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் முன்வந்துள்ளன. அந்த அமைப்புகளைச் சேர்ந்த சில அதிகாரிகளும் நாளை இங்கு வரவிருப்போரில் அடங்குவர்.

இன்று இங்கு வரவுள்ள 19 அதிகாரிகளின் பெயர் விவரம் வருமாறு:-

★ பிறான்கொய்ஸ் டிடொரு (எம். எஸ் எப்)
★ அலிஸ் ஞானு (எம். எஸ். எப்)
★ ஏ. என். எஸ். ஜீவஜோதி (இலங்கை திருச்சபைகளின் கவுன்சில்)
★ சந்திரசேகரம் வில்லியம்ஸ் ஜீ. ஆர் ஓ நிறுவனம்)
★ சூரியகுமாரன் வில்லியம்ஸ் (ஜீ. ஆர். ஓ நிறுவனம்)
★ பின் எஸ் மொண்டு [சிடா]
★ லீவ்னைபோக் [போரூட்]
★ எம். என் [illegible] [போரூட்]
★ பற்றிக் [illegible] (4ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஒக். 1

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ-3)

# பல்கலைக்கழக மாணவருக்கு விசேட காப்புறுதித் திட்டம்

கொழும்பு, ஒக். 1

பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கென விசேட காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த போவதாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

கல்விக்கல்லூரிகள், தொழில்நுட்பப்பாடசாலைகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

மாதமொன்றுக்கு காப்புறுதிக் கட்டணமாக பத்து ரூபாவைச் செலுத்த வேண்டும். இவர்கள் விபத்துக்குள்ளாகும் போது இழப்பீடாக 50 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படும்.

சுகாதார காப்புறுதி செய்துகொள்வோருக்கு வருடம் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபா (4ஆம் பக்கம் பார்க்க)

## வல்லை பாலம் போக்குவரத்து தடை

கடந்த ஞாயிறன்று வலிகிழக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது படையினரால் சேதமாக்கப்பட்ட வல்லை பாலம் திருத்தப்படவுள்ளது.

திருத்த வேலைகளை ஒட்டி வல்லைப் பாலத்தினூடான சகல வாகனப் போக்குவரத்தும் நாளை ஞாயிறு காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை தடைசெய்யப்பட்டிருக்கும் என தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

[illegible]
[illegible] என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சிமெந்து ஆலை நிலைமை: அதிகாரிகள் குழு மதிப்பிடும்

## அடுத்தவாரம் காங்கேசன் செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 1

காங்கேசன்துறையில் உள்ள சிமெந்து ஆலையை இரண்டையும் மீள இயக்குவதற்கு முன்னோடியாக —

அந்த ஆலைகளுக்குச் செய்யப்பட வேண்டிய திருத்த வேலைகளை மதிப்பீடு செய்வதற்காக — உயர்மட்ட அதிகாரிகள் குழு ஒன்று அங்கு செல்லவுள்ளது.

இந்த அதிகாரிகள் குழு அனேகமாக அடுத்த வாரத்தில் காங்கேசன்துறை செல்லலாம் என்று அறியப்படுகின்றது.

சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் தலைமையில் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப அதிகாரிகள், பராமரிப்புப் பிரிவு அதிகாரிகள் உட்பட பத்துப்பேர் இக்குழுவில் அங்கம் வகிக்கவுள்ளனர்.

இக்குழுவினருடன் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு அதிகாரிகள் லங்கா சிமெந்து நிறுவன அதிகாரிகள், மின்சார சபை அதிகாரிகள் ஆகியோரும் செல்வர்.

இக்குழுவினர் ஒரு வாரம் காங்கேசன்துறையில் (4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: திருமதி விமலா துரைராஜா, சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும், 19, பண்டாரக்குளம் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். (33076)

நல்லின பிறிமா புறோயிலர் கோழிக்குஞ்சுகள் (10 நாட்கள் முடிந்தவை) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: மேஜர் பிரதாப் செல்டிப் பண்ணை, இராசவீதி, கோப்பாய். (சி-9238)

ஒன்பது மாதம் வயதுடைய முட்டையிடும் கலப்பின வெள்ளைக் கோழிகளும், நல்லின மறிலாடு ஒன்றும் விற்பனைக்குண்டு. செ. குணபால சிங்கம், 628/2, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடி (கோயில் தேர்முட்டிக்கு வடக்கே), யாழ்ப்பாணம். [7934]

நல்லின ஜேர்மன் ஷெப்பேர்ட் அல்சேஷன் நாய் குட்டுடன் விற்பனைக்குண்டு. 24, குமாரசாமி வீதி, கந்தர்மடம். நேரம் 10—4 மாலை. [7935]

அடைவைக்கக் கூடிய நல்லின கோழிமுட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். Hyline Brown சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [33125]

### வான்கோழி விற்பனைக்கு

முட்டையிடும் பலநிற வான்கோழிகளும் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு தனித்தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகொள்ள வேண்டிய இடம்: "இறைச்சிக்கோழி விற்பனை நிலையம்", இல. 15/7, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தி, நல்லூர். [33129]

### வீடு வளவு விற்பனைக்கு

சாவகச்சேரி நவீன சந்தையில் இருந்து 100 யார் தூரத்தில் டச்சு வீதியில் நல்ல நிலையிலுள்ள வீடுவளவு விற்பனைக்குண்டு. தொடர்பு: க. அரசரத்தினம், நில அளவையாளர். [சி-9281]

### வீடு, காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு ஐயர் வீதியில் 4 பரப்பு வீடுவளவும், 8 பரப்பு பிரயோசனமுள்ள காணியும் விற்பனைக்கு இருக்கிறது. தேவையானவர்கள் வ. நா. கேஸ்வரன், J. S. T. Stationary 15, கண்டி வீதி (கோர்ட்டடி), சாவகச்சேரி. [7933]

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima Hyline Brown சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. Prima Broiler குஞ்சுகள் பதிவு செய்து 08-10-94 சனிக்கிழமை பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [33126]

### தவறிவிட்டது

28-9-94 அன்று குஞ்சுப் பரந்தனில் த1-6432 இலக்க வாகனம் முக்கிய ஆவணங்கள், கடிதங்கள், முக்கிய படங்கள், டயறிகள் போன்றவை அடங்கிய பிரயாணப்பை தவறிவிட்டது. எடுத்தவர்கள் கந்தையா நடராசா, பாடசாலை ஒழுங்கை, தாவடி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [7936]

மிஸ்றஸ் சோபிதமணி நவநேசராசா ஆகிய எனது அடையாள அட்டை 426343166V 27-9-94 அன்று யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் ஏவிம் சிறுவர் இல்லம், மெமோறியல் லேன், மானிப்பாய் என்னும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (33121)

### அளவையியல்

விஞ்ஞான முறையில் புதிய பாடத்திட்டத்துக்கு அமைந்தது. ஆக்கம்: S. சந்திரராஜா. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-9157]

### தேவை

கட்டடத் தேவைக்கேற்ற 5 இஞ்சி கொங்கிறீற் கற்கள் தொகையாகத் தேவை. தொடர்பு கொள்ளவும்: 41, பெரிய கடை, யாழ்ப்பாணம். (33109)

ஆசிரியருக்கு அறை அல்லது அனெக்ஸ் திருநெல்வேலி, கல்வியங்காடு, அரியாலை, யாழ்ப்பாணம் சுற்றாடலில் வாடகைக்கு தேவை. தொடர்பு கொள்ளவும். K. ரகுபதி, C/o நியூ விக்ரேஸ் றெக்கோடிங் பார், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (33105)

### புதிய வகுப்புகள்

விஜயதசமி ஆரம்ப வகுப்புகளிற்கு சேர விரும்புவோர் 05-10-94 (புதன்) முதல் 14-04-94 (வெள்ளி) வரை விண்ணப்பப் படிவங்களை மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். அலுவலக நேரம் 4-30 — 6-30 (மாலை) யாழ்மானை 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33117)

### திருமண சேவை

எம்மிடம் எல்லா மதத்தவர்களுக்கும், உள்நாடு, வெளிநாடு சகல உத்தியோகங்களிலும் மணமக்கள் உண்டு. முழுவிவரங்களுடனும், புகைப்படத்துடனும் தொடர்பு கொள்ளவும். திருமுருகன் திருமண சேவை, கோப்பாய்-மானி. வீதி, கைதடி (A.P.C. அருகில்) (33077)

### A/L - 95

A/L 95 பரீட்சைக்கு உதவியாக வெளிவந்து விற்பனையாகின்றது A/L வகுப்புக்குரியது. மனித உயிரியல் (Human Biology) உயர்தர, விலங்கியல் (பரீட்சை வழிகாட்டி) ஆக்கம் M. P. Sellavel B. Sc. சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம். மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். ஸ்ரீகாந்த் புத்தகசாலை, யாழ். நல்லூர். (சி/9177)

### மனித உயிரியல்-I

கே. டி. அருட்பிரகாசம் ஐ. என். ஏ. ஜயதுங்க விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-9158]

---

**PERSONAL NEW SCIENCE CENTRE**

எழிலகம் முன் யாழ்ப்பாணம்.

**94 A/L**

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள்

ஆரம்பம்: **01 — 10 — 1994** சனி 8-00 a. m.

**பிரிவு I**

இரசாயனவியல் 8 a m. திரு. செல்வா B. Sc. Hons)
பௌதிகவியல் திரு. ரவீந்திரநாதன் B.Sc (Cey.) Dip-in-Ed
விலங்கியல் 11 a m. திரு. ஈஸ்வரதாசன் B.Sc. (Cey.) Dip-in-Ed
தாவரவியல் 10 a m திரு. பாலா
தூய பிரயோககணிதம் 12 30 p m. திரு. குணசிங்கம் B Sc (Hons)

**பிரிவு II**

இரசாயனவியல் திரு. மகேஸ்வரன் B.Sc. (Hons.)
பௌதிகவியல் திரு. ஜெயசீலன் B Sc (Hons.)
தூய பிரயோககணிதம் திரு. குணசிங்கம் B Sc. (Hons.)
விலங்கியல் திரு. ஈஸ்வரதாசன் B Sc (Cey.) Dip-in-Ed.
தாவரவியல் திரு. ஸ்ரீதரன் B Sc (Cey.) Dip-in-Ed

Spoken English with Grammar By Mr HARY

(விபரங்களை நிலையத்தில் பெற்றுக் கொள்க) [சி 9243]

---

உ
தர்மசாஸ்தா சஹாயம்

## தர்ம சாஸ்தா குருகுலத்தில் விப்ர பரிஷத்தின்
# காயத்ரீ ஜப ஹோமம்

நடத்தி வைப்பவர்கள் தமிழீழ விப்ர பரிஷத்
காலம்: 02 — 10 — 1994
காலை 6 மணி முதல் 12 மணி வரை
10 மணி பிரத்யட்ச கோபூஜை திரிமூர்த்தி பூஜை

அனுக்கிரகிப்பவர்கள்:
சிவஸ்ரீ சிவ. சர்வேஸ்வரக் குருக்கள், மயிலணி
சிவஸ்ரீ பா. வைத்தியநாதக் குருக்கள், வரெழு
சிவஸ்ரீ க. செல்லப்பாக் குருக்கள், மாதகல்

10-30 மணி காயத்ரீ பிரவசனம்
நியாய சிரோமணி இ. ஸ்ரீகாந்த சுப்பிரம்மண்ய சாஸ்திரிகள்
மாந்திரீக சிரோமணி ஸ்ரீகாந்த சாம்பசிவக் குருக்கள்

தவிஜோத்தமர்களை பணிவன்புடன் அழைப்பவர்கள்

தர்மசாஸ்தா குருகுல ஆசிரிய மாணவர்கள்.

[7661]

---

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் மு. தம்பித்துரை
(முன்னாள் பொதுச்செயலாளர் Y M C A. யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் புனரமைக்கப்பட்ட காலத்தில் இச் சங்கத்தின் பொருளாளராகவும், பின் நிர்வாகசபை உறுப்பினராகவும், சேவையாற்றி பல திட்டங்களை நிறைவேற்ற உறுதுணையாய் இருந்தவரும், செஞ்சிலுவைச் சங்கத்திற்கான காணி / கட்டடம் வாங்குவதற்கு மிகவும் அக்கறையுடன் எம்முடன் சேர்ந்து செயற்பட்டவருமாகிய

மு. தம்பித்துரை அவர்களின்

மரணச்செய்தி கேட்டு மிக மனவேதனையடைகிறோம்.

அன்னாரின் பிரிவால் வாடும் அன்பு மனைவி, பிள்ளைகள், இனத்தவர்கள் எல்லோருக்கும் எமது கண்ணீர் பூக்களையும் சமர்ப்பிக்கின்றோம்.

Dr. இ. தெய்வேந்திரன்,
யாழ் செஞ்சிலுவைச் சங்கம்,
முன்னாள் தலைவர்.

லயன் வ. பரமசிங்கம்
யா. செ. சங்க
முன்னாள் செயலாளர்.

[33124]

---

# எமது புதிய வெளியீடுகள்

**இன்னும் ஒரு நாடு**
**இதய பூமி**
**உயிராயுதம் II**
**ஒளிவீச்சு (ஆவணி 94)**

சகல வீடியோ நாடா நிலையங்களிலும் இவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

படப் பதிவுகள் (RECORDING) கலை ஊடக இணையத்தில் செய்து கொள்ளலாம்.

**கலை ஊடக இணையம்**
1/7, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-9254)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெளிவாரிப் பரீட்சைப் பகுதி

முதற்கலை / முதல் வர்த்தகப் பரீட்சை 1993 எடுக்கும் பரீட்சார்த்திகளுக்கு

முதற்கலை / முதல் வர்த்தகப் பரீட்சை ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகி ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி முடிவடைகின்றது.

பதிவாளர்

யாழ்ப்பாணப் -
பல்கலைக்கழகம். (சி 9257)

---

கொக்குவில் மேற்கு

## ஸ்ரீசிவசுப்பிரமணிய (முதலிய) கோயில்
## பாராட்டு விழாவும், பரிசளிப்பு விழாவும்

இடம்: ஆலய முன்றில்
காலம்: இன்று 01 — 10 — 1994 சனி இரவு 7 மணி

பாராட்டுபவர்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(யாழ். பல்கலைக்கழகம்)

எமது ஆலயத்தில் நடைபெற்ற சண்முகப்பெருமானின் கும்பாபிஷேகத்தையும், வருடாந்த அலங்கார உற்சவத்தையும் பிரதம குருவாக இருந்து மிகச் சிறப்பாக நிறைவேற்றிய

பிரம்மஸ்ரீ சாமி சுந்தரேசக் குருக்கள்
அவர்களையும்

இவ்வுற்சவகாலத்தில் "திருவிளையாடற் புராணம்" தொடர் சொற்பொழிவு நிகழ்த்திய

அறுசமயப் புலவோன்
திரு. த. சிவகுமாரன்
அவர்களையும்
(அமைப்பாளர் சம்பன் கழகம் காரைநகர்)

உற்சவகாலத்தில் மங்கள இசை வழங்கிய நாதஸ்வர வித்துவான்

திரு. எம் குகதாஸன்
அவர்களையும்
பாராட்டுதலும்

ஆலய பரிபாலனசபையும், இளைஞர்களும் இணைந்து நடத்திய சமய அறிவுப் பரீட்சையில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவமும் நடைபெறவுள்ளன.

சிறப்பு நிகழ்ச்சி:

### பட்டி மன்றம்

"கவிஞர் கண்ணதாசன் பாடல்களிலா
கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல்களிலா
தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்கின்றன"

நடுவர்: பொன். கணேசமூர்த்தி

கவிஞர் கண்ணதாசன்
M S. தயாளன் B. A.
M. கணேசலிங்கம் (அதிபர்)
பொன். மதிமுகராசா (J P.)
வாமன் (ஆசிரியர்)

கவிஞர்
பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
கலா. நாகேஸ்வரன் M. A.
பிறிற்றோ (ஆசிரியர்)
பசு. ஸ்ரீபதி (ஆசிரியர்)
செ. சத்தியமூர்த்தி (B Sc.)

பட்டிமண்டப அமைப்பு:
பொன். மதிமுகராசா
எம். ஜி. ஆர் இல்லம், தாவடி.

ராசி பட்டுச்சோலை, இளைஞர்கள் ஆதரவில்

யாழ். ரமணனின்
## ராஜன்ஸ் இசைக் குழுவினர்
வழங்கும்
# இன்னிசை விருந்து

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம்,
இளைஞர்களும்,
ஆலய பரிபாலன சபையினரும்.

விளம்பர அனுசரணை:
சிவாஜி கிறீம் ஹவுஸ்
கோயில் வீதி, கொக்குவில். [33130]

---

# முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல தொழில்நுட்ப சேவையாளர்களுக்குமான (டீசல்-பெற்-ஜெனரேற்றர் தொழில் செய்வோர்) முக்கிய கலந்துரையாடல் 04-10-1994 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு திருநெல்வேலி திறப் வீதியில் உள்ள நிதர்சனத்தின் அமைவு அரங்கில் நடைபெற உள்ளது. இத்துறை சார்ந்த சகலரும் இதில் தவறாது சமூகம் தரும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

செயலாளர்,
கலை ஊடக இணையம்

[சி/9255]

---

# தவறிவிட்டது

முக்கிய நிகழ்வொன்றில் பயன்படுத்திய நான்கு பிலிம் ரோல்கள், மூன்று வங்கி அடையாள அட்டைகள், மற்றும் முக்கிய ஆவணங்கள், கடிதங்கள் கொண்ட சிறிய பார்சல் ஒன்று அல்லைப்பிட்டி இறங்குதுறையிலிருந்து பூநகரி செல்லும் வழியில் 20-09-94 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டு உதவவும்.

சி. குணரத்தினம்
புகையிரத நிலைய வீதி
பளை (7942)

---

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் எம். தம்பித்துரை

மத்திய மைந்தர்கள் பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினராகிய திரு. எம். தம்பித்துரை அவர்களின் மறைவு கேட்டு பேரதிர்ச்சி அடைந்துள்ளோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு அவரது மறைவால் துயருறும் மனைவி, மக்களுக்கு ஆறுதல் கூறி அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

தலைவர், செயற்குழு,
மத்திய மைந்தர்,
பழைய மாணவர் சங்கம்.

(33135)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03 — 12 — 1952
மறைவு: 13 — 10 — 1993

## செல்வி தம்பையா விஜயமலர்

திதி: 02 — 10 — 1994

அன்னையின் மடியில், அருமையாகி தந்தையின் அன்பின் மலராகி, சகோதரர் நடுவே ஒளியாகத் திகழ்ந்த உன்னை ஆண்டொன்று ஆகினும் எம் மனமென்னும் கோயிலில் வாடா மலராகவே வைத்துள்ளோம்.

உன் ஆன்மா சாந்திபெற பிரார்த்திக்கும்:
அப்பா, அம்மா, சகோதரர்,
மற்றும் உற்றார், உறவினர்;

த. கிருஷ்ணகோபால்,
வாளையடி தெற்கு,
பண்டத்தரிப்பு. (32999)

---

# முதலாம் ஆண்டு நினைவு தினம்



மலர்வு: 20 — 11 — 1937
உதிர்வு: 01 — 10 — 1993

## அமரர் றொபேட் தம்பிரெட்ணம்
(றெட்னானந்தன்)

கண்மூடி திறப்பதற்குள் சென்றுவிட்டாய்
எங்களை விட்டுப் பிரிய ஏன் மனம் கொண்டாய்
தூங்காத கண்களில் துளிர்த்திடும் நீர்த்துளியாய்
ஆங்காங்கே வந்திடும் உங்கள் நினைவு
காலங்கள் எத்தனை சென்றாலும்
உங்கள் நினைவு என்றும் பசுமை எம் நெஞ்சில்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், தாய்,
சகோதரர், உறவினர்;

5/3, ஆச்சுக்கூட ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (33106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20-08-94இல் நடைபெற இருந்த

அபர்ணாலயாவின்

# * புது வசந்தம் *

ரசிகர்களின் ஆவலைப்பூர்த்தி செய்ய
முத்தான புதிய பாடல்களுடன்

16-10-94 ஞாயிறு கைலாசபதி
கலை அரங்கில் நடைபெறும்

20-08-94 நுழைவுச் சீட்டுக்களைப்
பயன்படுத்தலாம்.

(சி-9252)



## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

இடம்: ஆவரங்கால் சவாரித்திடல்
காலம்: 02-10-1994 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.00 மணி

★ கைக்கொடிச் சவாரியும் இடம்பெறும்.
★ பிரவேசம் இலவசம்.

ஆவரங்கால் விவசாயிகள்

[33139]


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் மு. தம்பித்துரை அவர்கள்

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் முன்னாள் தலைவராக கடமையாற்றி தனது அயராத உழைப்பின் மூலம் இணையத்தின் வளர்ச்சிக்கு வழிகோலியவரும், அரச சார்பற்ற நிறுவனங்களின் குடும்பத்தில் ஒருவராகவும், வழிகாட்டியாகவும் பணியாற்றி வந்தவருமாகிய

அமரர் முருகுப்பிள்ளை தம்பித்துரை

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
யாழ். மாவட்டம்

100, சேர் வீதி,
யாழ்ப்பாணம்.

சி/9253

## மரண அறிவித்தல்கள்

### ஆழ்வாப்பிள்ளை முருகேசு

வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய முன்னாள் முகாமையாளரும், தேவரையாளி இந்துக் கல்லூரி பெற்றார் ஆசிரிய சங்கத்தின் நீண்டகால செயலாளரும், பாக்கியமலர்ஸ் மருந்தக முன்னாள் உரிமையாளரும், பிரபல தர்மவானுமாகிய ஆழ்வாப்பிள்ளை முருகேசு கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நேசமணியின் அன்புக் கணவரும், பாக்கியநாதன் (பக்கு மருந்தகம், பம்பலப்பிட்டி), பாக்கியராஜன் (பாக்கியமலர், வவுனியா), சுமதி ஆகியோரின் அன்புத்தந்தையும், தவமணி, சிவராணி, பாரிவள்ளல் (ஆனந்தன்ஸ் வவுனியா), ஆகியோரின் அன்புமாமனாரும், கௌரீசன், கௌமிலா, கேதீசன், வரதீசன், ராஜிகா, இளங்குமரன், மனோஜா, கோஜனா, அருள்பரந்த், கிதாஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (1-10-94) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல 18 ஜானகி ஒழுங்கை பம்பலப்பிட்டி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் களத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கி. திரவியசிங்கம்

வதிரி,
கரவெட்டி

(7941)

### MURUGUPILLAI THAMBITHURAI

[Ex Gen-Secy. Y. M C A Jaffna]

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை தம்பித்துரை புதன்கிழமை 28-9-94 காலமானார்.

இவர் உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகுப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், தேவி தம்பித்துரை [ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி]யின் அன்புக் கணவரும், றோயிஸ் [லண்டன்] அனுஜா [உடுவில் மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், இளைப்பாறிய அதிபரும், தற்போது அவுஸ்திரேலியாவில் வசிப்பவருமாகிய செல்லம்மா தியாகராஜா, இராசம்மா பொன்னுச்சாமி, நாகலிங்கம் (இளைப்பாறிய அதிபர்), காலஞ்சென்ற சுந்தரசாமி, இளைப்பாறிய வருமானவரி உத்தியோகத்தரும், தற்போது கனடாவில் வசிப்பவருமாகிய சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும், உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சபாரத்தினம் பத்தினிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற கந்தையா தியாகராஜாவின் [ஆசிரியர்] மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 02-10-94 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு, லவ்லேன், உடுவிலில் உள்ள அவரது இல்லத்திலும், 3.00 மணிக்கு உடுவில் தென் இந்திய திருச்சபை தேவாலயத்திலும் நடைபெற்று, பூதவுடல் உடுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
வண. டி. எஸ். தியாகராஜா
கிறிஸ்தவ இறையியற் கல்லூரி,
சுன்னாகம்.

(33138)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 328/2 இலுள்ள அச்சகத்தில் 01-10-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# றோஹண கொலை பற்றி விசாரணை நடத்தப்படும்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

ஜே.வி.பி. இயக்கத்தின் தலைவர் றோஹண விஜேவீர அதன் உபதலைவர்களில் ஒருவரான உபதிசக குமாரநாயக்க ஆகிய இருவரதும் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என வெளிநாட்டு வர்த்தக நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்கள், தாக்குதல் சம்பவங்கள் குறித்தும் விசாரிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

திரு. ஆரிய புலகொட தலைமையில் தேசிய விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள் குழு ஒன்று அமைச்சரை சந்தித்துப் பேச்சு நடத்தியது. அவர்களுடன் உரையாடிய போதே அமைச்சர் பீரிஸ் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் அரசியல் கைதிகள் ஆகியோரின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படும் என்றும் அமைச்சர் பீரிஸ் அப்போது உறுதியளித்தார்.

குற்றச் சாட்டுகள் இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டவுடன் விடுவிக்கப்படுவர் என்றும், ஏனையோரை பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளோருக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படவேண்டும் என்று தேசிய விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள் அமைச்சரைக் கேட்டுக் கொண்டனர்.

அதிகார பூர்வமற்ற தடுப்பு முகாம்கள் இன்னமும் செயற்பட்டுவருகின்றன என்று தேசிய விடுதலை முன்னணியின் செயலாளர் ஆரிய புலகொட அமைச்சரிடம் தெரிவித்தார்.

சிறைச்சாலை ஆணையாளர், பதில் சட்டமா அதிபர், தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விசாரணை செய்யும் குழுக்களின் தலைவர் ஆகியோரும் அமைச்சர் பீரிஸுடன் இந்த உரையாடலில் கலந்து கொண்டனர். (ஐ-4)

# சித்த மருத்துவ பட்டதாரிகள் செயலகங்களில் நியமனம்

## சுகாதார அமைச்சர் பௌசி இணக்கம்

யாழ்ப்பாணம் ஒக். 1

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ துறையில் இருந்து வெளியேறிய சித்த மருத்துவ பட்டதாரிகளுக்கு பிரதேச செயலகங்களில் நியமனம் வழங்க சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌசி இணக்கம் தெரிவித்துள்ளார்.

சித்த மருத்துவப் பட்டதாரிகள் சங்க தூதுக் குழுவுக்கும் அமைச்சருக்கும் இடையில் நடந்த பேச்சுக்களில் இந்த இணக்கம் காணப்பட்டது.

சித்த மருத்துவ பட்டதாரிகளுக்கு சொல்லை திட்டமிடல் அமைச்சு ஆசிரிய நியமனங்களை வழங்கியிருந்தது.

இந்த நியமனத்தை தாம் ஏற்கமுடியாது என்றும் —

நிர்வாகமட்டத்தில் வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் — தூதுக்குழுவினர் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

பிரதேச செயலகங்களில் விசேட வெற்றிடங்களை ஏற்படுத்தி சித்த மருத்துவ பட்டதாரிகளை அவ்விடங்களில் நியமிக்க அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார். (இ-3)

### ஸ்கந்தா நூற்றாண்டு கலைவிழா

மயிலணி, ஒக் 1

ஸ்கந்தவரோதயக் கல்லூரி நூற்றாண்டுக் கலைவிழா இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி திறந்தவெளி அரங்கில் அதிபர் திரு. ஆ. கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சுன்னாகம் நாகம்ஸ் உரிமையாளர் திரு என். அரசரத்தினம் கலந்து கொள்வார். (இ 89)

### நரோமா பயணிகளுக்கு

யாழ்ப்பாணம். ஒக். 1

எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பருத்தித்துறைக்கு வரவிருந்த ''நரோமா'' கப்பல் அன்று வரமாட்டாது என்றும் —

அக்கப்பல் எதிர்வரும் 6ஆம் திகதியே வரவிருப்பதாக அன்று காலை 8 மணிக்கு முன்னர் பயணிகளை பருத்தித்துறைக்கு வருமாறும் — மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-3)

### டாக்டர் ரவிராஜ் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக் 1

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவில் பணியாற்றிய வைத்திய கலாநிதி க. ரவிராஜ் இன்று தொடக்கம் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவ படிப்பை முடித்துக் கொண்ட வைத்திய கலாநிதி ரவிராஜ் கடந்த 9 வருடங்களாக தொடர்ச்சியாக யாழ். ஆஸ்பத்திரியில் பணியாற்றினார்.

போர்க்காலச் சூழ்நிலையில் யாழ்ப்பாணத்திலேயே பணிபுரிய வேண்டும் என்ற பெரு விருப்பின் காரணமாக —

இரண்டு வருட உயர்படிப்புக்கு கொழும்பு ஆஸ்பத்திரிக்கு வருமாறு கடந்த வருடம் அழைக்கப்பட்ட போதிலும் ஒரு வருடப் பயிற்சியை யாழ் ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை நிபுணர் எஸ். கணேசரத்தினத்திடம் பெறுவதற்கு அனுமதி பெற்று இங்கேயே பணிபுரிந்தார்.

இரண்டாம் ஆண்டுப் பயிற்சியை கொழும்பிலேயே பெற வேண்டும் என்பதால் அங்கு செல்லும் வைத்திய கலாநிதி ரவிராஜ் —

பயிற்சியை முடித்துக் கொண்டு மீண்டும் யாழ்ப்பாணத்திலேயே சேவை புரிய விருப்பம் கொண்டுள்ளார். (ஆ-அ-16)

### விளையாட்டு நிகழ்வுகள்

தென்மராட்சி கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 17 வயதுப்பிரிவின் – அரையிறுதி ஆட்டங்கள் இன்று [சனி] பிற்பகல் மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன. [ஜ-117]

### ஆலயங்களில்

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு ஏகாதசி திருவிழா விசேட அபிஷேகம், பூசை வழிபாடுகளுடன் நடைபெறும். [ஒ-30]

★ ★ ★

இணுவில், அன்னை வேளாங்கண்ணி ஆலய வருடாந்த திருநாள் இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும்.

பங்குத் தந்தை வண. பெனற் அடிகளார் தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (ஒ-51)

சுடற்படை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
படையினரின் 8 பேரின் சடலங்கள் கரையொதுங்கியபோது படையினரால் கண்டுபிடிக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்க தெரிவித்தார். (ஐ-எ-6)

சிமெந்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
தங்கி நின்ற தொழிற்சாலையை இயக்குவதற்குத் தேவையான திருத்த வேலைகள் தொடர்பாக ஆராய்வதுடன் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்ட சேதம் குறித்தும் மதிப்பீடு மேற்கொள்வர்.

இதேவேளை, காங்கேசன்துறையில் உள்ள மின்நிலையத்தை இயக்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக மின்சார சபை வட்டாரங்களில் இருந்து அறியவந்துள்ளது.

காங்கேசன்துறையில் உள்ள இரண்டு சிமெந்து ஆலைகளில் ஒன்றையாவது அடுத்த மாதத்தில் மீள இயக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (அ-3)

பல்கலைக்கழக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
வரை கிடைக்கும்.

பல்கலைக்கழகக் கல்வியை முடித்துக் கொண்டவர்களுக்கு பொருத்தமான வேலை பெறும்வரை மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா வீதம் மாதங்களுக்கு நிதி உதவியை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வழங்கும்.

இத்தகவல்களை கூட்டுத்தாபனத் தலைவர் [illegible] தெரிவித்தார். (இ-எ)

### படையினரிடம் சிக்கியவர் விடுதலையானார்

வடமராட்சி, ஒக் 1

தெல்லிப்பளைப் பகுதியில் மாங்காய் பிடுங்கிவரச்சென்ற சமயம் படையினரிடம் சிக்கிய குளமங்காலைச் சேர்ந்த குட்டியர் முருகையா (வயது 43) என்பவர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டார்.

பலாலிக்கு விஜயம் செய்த செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அதிகாரியிடம் படையினர் இவரை ஒப்படைத்தனர். பின்னர் இவர் ''பிளாம் பயான்'' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு கூட்டிவரப்பட்டார். (ஐ 173)

### அம்பாந்தோட்டை அமைப்பாளராக சஜித்

கொழும்பு, ஒக் 1

ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட அமைப்பாளராக சஜித் பிரேமதாஸா நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதம் ஐ. தே. க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரவால் கடந்த புதன்கிழமை சஜித் பிரேமதாஸாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இக்கடிதம் சஜித்துக்கு கிடைத்ததாக அவரது தாயாரான ஹேமா பிரேமதாஸா தெரிவித்தார். [இ-6]

### கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக் 1

தமிழீழத் திருவள்ளுவர் மன்றம் இன்றும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடத்த இருந்த கலைகள் பற்றிய கருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் —

அந்தக் கருத்தரங்கு எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் அன்னை பூபதி கலையரங்கில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

தொண்டர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
புருணி [எஸ். வி. எவ்.]
★ கே. தேவேந்திரராஜா [செடக்]
★ திருமதி. எல். ஆரியரத்னா [சர்வோதயம்]
★ சகுலா பியசந்த [சர்வோதயம்]
★ எஸ். வி. சங்கரப்பிள்ளை [சர்வோதயம்]
★ ஏ. சண்முகநாதன் [கொழும்பு இணையம்]
★ கோர்டன் ஜே. மொலிற்றர் [கெயர்]
★ எஸ். விக்னராஜா [கெயர்]
★ நக்கவி மொனிஸ்
★ ஒலி பீற்றர் ஒப்சாண்ட் [illegible]
★ ஏ. ஜீ. எஸ். பாலச்சந்திரன் [தெல்லியூர்]
(ஐ-5)

### 'ஹபரண' சென்றது 'கோமாரி' வரும்

வடமராட்சி, ஒக் 1

உரத்தினை இறக்கி முடித்துக்கொண்டு 'ஹபரண' கப்பல் நேற்று முன்தினம் இங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

இதேவேளை அத்தியாவசியப் பொருள்களுடன் 'கோமாரி' கப்பல் இன்னும் இரண்டொரு தினங்களில் பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-173)

### இன்று சர்வதேச சிறுவர் தினம்

கொழும்பு, ஒக் 1

சர்வதேச சிறுவர் தினம் இன்றாகும். இதனை ஒட்டி உலகம் முழுவதும் சிறுவர்கள் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகள் இன்று நடைபெறவுள்ளன. (ஐ-எ-6)

### இன்று

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவியவர் நினைவு நாளும் இன்று சனிக்கிழமை அதிபர் அருட் சகோதரி மேரி எக்கலீனா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். வடக்கு கல்வி வலய பணிப்பாளர் திரு க. சந்திரசாமி கலந்துகொண்டு பரிசு வழங்கவுள்ளார். (இ-11)

★ ★ ★

பாடசாலை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் நடத்தும் இலவச ஆங்கில வகுப்பு இன்று சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

★ ★ ★

சாவகச்சேரி அறவழிப் போராட்டக் குழுவின் அறவழி இலக்கியப் பேரவையினர் நடத்தும் கவிதை அறிமுகவிழா சாவகச்சேரி அறவழி பயிலகத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும். (ஒ-30)

★ ★ ★

தவத்திருவடிவேற் சுவாமிகளின் மாதாந்த குருபூசை தினம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இணுவில் பரமானந்தவல்லி அம்பாள் ஆலய மண்டபத்தில் நடைபெறும். [ஐ-3]

### முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஒக் 1

நாவற்குழி மகாவித்தியாலயத்தின் முத்தமிழ் விழா இன்று சனி பிற்பகல் 6 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் திரு பி. முத்துலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சி. சிவலிங்கராசா கவிஞர் நாவற்குழியூர் நடராசன் நினைவாக நினைவுச் சொற்பொழிவாற்றுவார். [ஐ-3]

### மரம் விலை இன்று முதல் குறைப்பு

கொழும்பு, ஒக். 1

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மரத்தின் விலையை இன்று முதல் குறைக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வீடமைப்பு நடவடிக்கைகளுக்கு இவ் விலைக்குறைப்பு உதவும் என்று தெரிவிக்கப்பட்டது.

தனியார் துறையினரும் மரத்தின் விலையைக் குறைக்கும்படி கோரப்பட்டுள்ளனர்.

ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் சதுர மீற்றர் மரத்தினை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் விநியோகித்து வருகின்றது. இது ஒரு நாட்டின் மரத் தேவையில் 45 சதவீதமாகும் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

### கைதடியில் முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஒக். 1

கைதடி ப.நோ. கூ. சங்கத்தின் கைதடி எதிர்வரும் 3 ஆம், 4 ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளில் காலை 8-30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடல் வேலை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாவற்குழி தச்சன் தோப்பு, மறவன்புலோ, நுணாவில் போன்ற பகுதிகளைச்சேர்ந்த வர்த்தகர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு யாழ் செயலக நிறுத்தல் அளவை பகுதியினர் அறிவித்துள்ளனர். (ஒ-4)

### கொள்ளை நோய்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதை தடுக்க முடியும் என்று— அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் யாழ். மாவட்டத்தில் கொள்ளை நோய் காணப்பட்டால் அதனை எப்படித்தடுப்பது என்பது குறித்த விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ் மாநகர சபை சுகாதார அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

இந்த நோய் இங்கு காணப்படும் பட்சத்தில் இந்த இடம் எடுக்கத் கலந்துரையாடலில் விளக்கப்பட்டது. நோயைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்

யாழ் மாநகரசபைக்குப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

மாநகரசபை சுகாதார அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன் தடுப்பு முறைகள் பற்றி விளக்கினார்.

பின்வரும் தடுப்பு முறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

★ நோய் ஏற்பட்டுள்ள நாடுகளில் இருந்து வருவோரையும் அந்த நாடுகளில் இருந்து வரும் பொருள்களையும் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்துதல்.

★ நோய்பற்றி அறிந்த ஆரம்பத்திலேயே சிகிச்சை பெறுதல். நோயாளியை தனிமைப்படுத்தல்.

★ நோய் காணும் பகுதியில் இருந்து எவரும் வெளியேறாது தடுத்தல் வெளியில் இருந்து எவரும் உள்ளே செல்வதையும் தடுத்தல்.

★ எலிகளை ஒழித்தல், உணவை நல்ல முறையில் களஞ்சியப்படுத்தல், எலிகளுக்கு ஏற்ற சூழலை ஏற்படுத்தாதிருத்தல்.

★ எலித்தெள்ளுகளுக்கு எதிராக கிருமி நாசினி தெளித்தல். (இ-ஐ-1)


உ
இலங்கை

## இந்துமத ''குருபீடாதிபதி'' தெரிவு

இந்து மதகுருமார் ஒன்றிய யாழ். மாவட்டச் செயலகத்தில் நாளை (02-10-1994) ஞாயிறு பிற்பகல் 3.00 மணிக்கு ''குருபீடாதிபதி'' தெரிவுக்கான வாக்குகள் எண்ணப்பட்டு வெளியிடப்படும். நிர்வாகசபை, மகாசபை அங்கத்தவர்கள் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சாம் சோமஸ்கந்தசர்மா
செயலாளர்
இந்து மதகுருமார் ஒன்றியம்

110/12, சட்டநாதர் கோயில் பின் வீதி,
நல்லூர். யாழ்ப்பாணம். [33141]



## தவறிவிட்டது

யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மாணவன் ஜெயரூபன் ஜெயசுதன் ஆகிய எனது பிறப்புச் சான்றிதழ், பாடசாலை விலகல் சான்றிதழ் உட்பட மேலும் சில சான்றிதழ்கள் அடங்கிய பெரிய என்வலப் கடந்த செவ்வாய்க்கிழமை (27-09-94) பி.ப. 6-30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வரும்போது கோப்பாய்க்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் யாழ் இந்துக் கல்லூரியில் அல்லது எழுதுமட்டுவாழ் தெற்கில் உள்ள எனது வீட்டில் ஒப்படைக்கவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(இ-9256)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org